முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் மப்பேடு ஊராட்சியில் ஒன்றிய செயலாளர் மோ.ரமேஷ் ஏற்பாட்டில் மக்களுக்கு சமையல் பாத்திரங்கள் அறுசுவை உணவு பெண்களுக்கு புடவை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், வழங்கினார். உடன் ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆர்.கோபால், எம்.ரவி, ஏகாம்பரம், கீதா முனுசாமி, தேவா, நீலாவதி ராஜேந்திரன், கே.பி.எஸ். கார்த்திகேயன், சதாசிவம், ஜெயவேல், கவியரசு, தமிழ் மொழி, தட்சிணாமூர்த்தி, சரத் பாபு, பிரபா, பிரவீன் குமார், சரண்ராஜ், காயத்ரி குமரேசன், இளவரசன், எலிசபாத், திலீப் குமார், ராகுல், உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், எல்லாபுரம் வடக்கு ஒன்றியம் மற்றும் மாவட்ட வர்த்தகரணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, ஆதிதிராவிட நலக்குழு சார்பாக பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஒன்றிய செயலாளர் எல்லாபுரம் பி.ஜெ.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் வல்லூர் எம். எஸ்.கே.ரமேஷ் ராஜ் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, தமிழன் பிரசன்னா, சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையற்றினார்கள். உடன் மு.பகலவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், எம்.எல்.ரவி, ஏ.வி.ராமமூர்த்தி, வெங்கடாஜலபதி , பா.செ. குணசேகர், ஆ.சத்தியவேலு, கி.வே.ஆனந்த் குமார், பரிமளம், ஜான்பொன்னுசாமி, வே.ஆனந்த் குமார், முத்து, கே.வி.லோகேஷ், பா.தனசேகரன், வி.பி.ரவிக்குமார், கா.சம்பத், ரவிச்சந்திரன், என்.கிருஷ்ணன் மூர்த்தி, சித்ரா முனுசாமி , ஜெயலலிதா சசிதரன், டி.சங்கர், சுமன், சிவாஜி டில்லி சங்கர், ஜமுனா அப்புன், ரவி, சண்முகம், வெங்கடேசன், சிவசங்கர், முகமது மைதீன், இ.ராஜா, சீனிவாசன், ஐ.ராஜா, அசோகன், ஐ.ஏ.எப்.ராஜா, பன்னீர்செல்வம், மணிகண்டன், அருள், பாபு, சம்பத் சீனிவாசன், ஹேமா குமார், ரிதி, கோவிந்தராஜ் , மூர்த்தி, ஏழுமலை, தமிழரசு, குப்பன், வில்சன், வில்சன், கௌதம், தினேஷ்குமார், ஜி.டி.எம்.கார்த்திக் உள்பட பலர் உள்ளனர்.

உலக குருதி கொடையாளர் தினம் - 2025

அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

சென்னை, ஜூன்.18– மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (17.06.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டர ங்கில், உலக குருதி கொடையாளர் தினம் 2025 நிகழ்ச்சியினை தொடங்கி வைத்து, குருதி கொடையாளர்களுக்கு விருதுகள் வழங்கி விழா பேருரையாற்றினார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு, 66 முறை இரத்த தானம் செய்துள்ளதை பாரா ட்டி "தொடர் தன்னார்வ குருதி கொடையாளர்" என்கின்ற சிறப்பு விருது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார் அவர்களால் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

உலக குருதி கொடையாளர் தினம் 2025

ஒவ்வொரு ஆண்டும் ஜீன் திங்கள் 14ஆம் தேதி உலக குருதி கொடையாளர் தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்தாண்டுக்கான உலக குருதி கொடையாளர் தினம் இன்றைக்கு மிக சிறப்பாக அனுசரிக்கப்பட்டு, பல்வேறு நிகழ்வுகள்நடத்திமுடிக்கப்பட்டிருக்கிறது. இந்த உலக குருதி கொடையாளர் தினத்தை பொருத்த வரை வரலாற்றில் நிலைத்து நிற்கக்கூடிய ஒரு தினமாக இருந்துக் கொண்டிருக்கிறது. அதற்கான காரணம் ஒவ்வொரு ஆண்டும் குருதி கொடையாளர்களை பாராட்டுவதோடு, பாராட்டு சான்றிதழ் வழங்கப்படுவது, தன் னார்வலர்களையும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் சிறப்பிப்பது என்கின்ற வகையில் தொடர்ச்சி யாக நடைபெற்று வருகிறது. அதேபோல் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் அந்த மாவட்ட எல்லைக்குள் குருதி கொடை தருபவர்களை தொடர்ந்து பாராட்டி சிறப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தாண்டு நிதிநிலை அறிக்கையின் போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்களோடு, அறிவிக்கப்பட்ட மூன்று சிறப்புக் குரிய அறிவிப்புகள் இந்த தினத்தில் இங்கே நிறை வேற்றப்பட்டிருக்கிறது.

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் அரசு மருத்துவமனை தொடர்பான கேள்விக்கு

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரை ஒரு வட்டார அரசு மருத்துவமனை. அந்த மருத்துவமனையில் தற்போது 5 மருத்துவர்கள் பணியில் இருக்கிறார்கள். 5 செவிலியர்கள் பணியில் இருக்கிறார்கள். 12 இதர பணியாளர்களும் பணியில் இருக்கி றார்கள். பணியாளர்களுக்கு எந்தவிதமான தட்டுப்பாடும் இல்லை. போதுமான அளவிற்கு மருத்து வர்களும், மருத்துவம் சார்ந்த பணியாளர்களும் பணியில் இருக்கிறார்கள். இதுபோன்ற சம்பவம் நடைபெற்று எங்கள் கவனத்திற்கு வந்தவுடன் சம்பந்தப்பட்ட துறை மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் அவர்களை விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டிருந்தோம். தூய்மை பணியாளர்கள் சிகிச்சைகள் நடக்கும் இடத்தில் உதவுவதற்கு எந்த விதத்திலாவது சென்றிருப்பார்கள். விசாரித்ததில் அவர் ஏதோ உதவுவதற்கு வந்திருப்பதாக சொல்லப்பட்டிருந்தாலும், முழுமையாக விசாரிக்க வேண்டும் என்கின்ற வகையில் அவரைக் கொண்டு அப்பணி செய்தது என்பது தவறு என்கின்ற வகையில் சம்மந்தப்பட்ட மருத்துவர் உடனடியாக இடமாற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். மருத்துவமனையில் இருந்த செவிலியர் மற்றும் நிலைய கண்காணிப்பா ளர் அவர்களையும் இடமாற்றம் செய்ய அறிவுறுத்தியிருக்கிறோம். இன்றைக்கு அந்தப் பணியும் முடிந்து விடும். தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற 299 வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் இருக்கின்றது. சம்மந்தப்பட்ட மருத்துவமனைகளில் உள்ள மருத்துவமனை கண்காணிப்பாளர்கள் விழிப்புணர்வுடன் இருந்து அவரவர் கடமையினை செய்வார்கள் என்கின்ற நம்பிக்கையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, அனைத்து அவசியமான மருந்துகள் இன்றைக்கு போதுமான அளவிற்கு கையிருப்பில் இருக்கின்றது. குறிப்பாக தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் (TNMSC) நிர்வாக இயக்குநர் மருத்துவமனைகளில் மருந்து இருப்பு எவ்வளவு இருக்கிறது, எவ்வளவு தேவை போன்ற பட்டியலை கொண்டு மருந்து இருப்பு பணியினை மிகச் சிறப்பாக செய்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஹெபிடேடஸ் பி (Hepatitis B) என்னும் மருந்து தற்போது 6,21,320 டோஸ் கையிருப்பில் இருக்கின்றது. இந்த மருந்து இன்னும் 8.5 மாதம் காலத்திற்கு தேவையினை பூர்த்தி செய்யும். அதேபோல் பென்டாவலன்ட் தடுப்பூசி 5,52,100 எனும் வகையில் கையிருப்பில் உள்ளது, இது 2.5 மாதத்திற்கு தேவையான வகையில் கையிருப்பில் உள்ளது. ஆக எதிர்கால அளவிற்கு தேவையான அளவில் மஞ்சள் காமாலை நோய்க்கான மருந்துகள் கையிருப்பில் உள்ளது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், தமிழ்நாடு மாநில குருதி பரிமாற்று குழுமம் திட்ட இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர் திருமதி.ஆர். சீத்தாலட்சுமி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராயச்சி இயக்குநர் மரு.சங்குமணி மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கொரியர் பி.முருகன் தலைமை! ஐட்ரீம் ஆர்.மூர்த்தி முன்னிலை!

52(அ) வட்டத்தில் கலைஞர் பிறந்தநாள்! பொதுக்கூட்டம்! கல்வி உதவித் தொகை - நலஉதவிகள்!

இ.பரந்தாமன் - ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி - அ.சுபேர்கான் சிறப்புரை!

சென்னை, ஜூன்- 18

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்கு பகுதி 52(அ) வட்ட திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கல்வித் உதவிதொகை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக் கூட்டம் நாளை (19.06.2025 வியாழக்கிழமை) மாலை 6.00 மணியளவில் பாரத் தியேட்டர் ரவுண்டானா அருகில் நடைபெறுகிறது.

வட்டச்செயலாளர் கொரியர் பி.முருகன் தலைமை வகிக்கிறார். தலைமை செயற்குழு உறுப்பினர் ஐட்ரீம் ஆர். மூர்த்தி எம்.எல்.ஏ, முன்னிலை வகிக்கிறார்.

வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார், நா.சண்முகம், எம்.கே.இஸ்மாயில், எம்.எம்.டி.சலாவுதீன், கி.ராஜேந்திரன், எஸ்.புகழேந்தி, ஜெ.கௌரீஸ் வரன், எம்.எல்.ரவி, இரா.பாலன், பாலாலட்சுமணன், கு.ரமேஷ், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், கீதா சுரேஷ் எம்.சி, நா.கஜேந்திரன், எஸ்.ரமேஷ், ஜி.எஸ்.முருகன், இரா.மருதுபாண்டியன், டி.ஆர்.எஸ்.ஞானகுரு, அ.சாந்தகுமார், மொய்தீன், எம்.லோகநாதன், ஆர்.எஸ்.லட்சுமிபதி, டி.கல்யாணி, ஆர்.சேகர், இ.கிருஷ்ணமூர்த்தி, ஸ்டில் ஆர்.பாலா, என்.பாபு, ஆர்.கெவின், கழக க.பாபு, சி.சுலோச்சனம்மாள், பி.அன்சர், டி.சந்திரன், கே.லோகேஷ், வண்ணை டி.ராஜேந்திரன், எம்.முரளிபாலா, எஸ்.இளங்கோ, ஆட்டோ நந்தா, ஆர்.எ.ரஷீத், எஸ்.உதயகுமார், பி.விஜயகுமார், ஏ.காஜா உசேன், போட்டோமொய்தீன், பாக்கியலட்சுமி, என்.ஹயத், வி.மாணிக்கம், எம்.தாமரை கண்ணன், ஏ.விஸ்வநாதன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

கூட்டத்தில் கழக சட்டத் துறை இணைச்செயலாளர் இ.பரந்தாமன் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, அ.சுபேர்கான், ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

தா.இளையஅருணா, ந.மனோகரன், பி.டி.பாண்டி செல்வம், என்.மருதுகணேஷ், மு.கோபி, க.நாகம்மை, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வண்ணை புகாரி, வே.சிவகுமார், கட்பீஸ்.ப.சோம சுந்தர மூர்த்தி, லஷ்மிவேலு, லியோ டி.சுரேஷ், எம்.தீனதயாளன், கார்த்திக்செங்குட்டுவன், வெ.சு.சத்தியநாராயணன், லயோலாகே.மதன், க.கோ விந்தசாமி, மோ.ரவிகுமார், சு.சசிதரன், ரெயின்போ விஜய குமார், ஜெயாவினோர் ரீதர், ஜெ.கே.நாதன், டி.சரவணமூர்த்தி, பா.சுரேகா, இரா.பொன்முடி, எஸ்.யுவராஜ், என்.குமார், எம்.பாலாஜி, ஆர்.டி.ஜெய்சங்கர், எஸ்.முகம்மது மொய்தீன், ஏ.அன்வர், எம்.பாலசுப்பரமணி, த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ.மோகன், க.கலைசெல்வன், ஜி.சதிஷ் குமார், என்.கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், ஆர்.வி.கணேஷ், பெ.கண்ணன், அத்தோ பி.முனுசாமி, வி.குமார், கா.சீனிவாசன், பி.விஷால், ஆனந்த், கௌரிநாதன், அ.சந்திரசேகர், ஆர்.பிருந்தா, ஆர்.சரசா, ஒய்.எம்.டி.இஸ்மாயில், வி.சுந்தரி, டி.சரசுவதி, டி.மோகனா, பி.தமிழ் செல்வி, பாப்பம்மாள், ஜி.ரசூல்பீ, எல்.ஆனந்நி, சி.தமிழ் தென்றல், டி.கலைவாணி, ஏ.கே.சர்தார், எம்.கே.கமாலுதீன், எம்.தாமோதரன் கௌஸ் பாஷா, ஜிந்தா, டில்லிபாபு, யுவராஜ், சி.டி.ரஹ்மான், ஏகப்பன், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

எம்.முருகன், ஏ.ரோமி, எம்.அன்வர், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் 37 வது வட்டப் பாக நிலை (BLA.2) முகவர்கள் கூட்டம் பாக நிலை முகவர்கள் ஆர்.ராஜேஷ், எஸ்.செந்தில்குமார், இ.மகாலட்சுமி, வி.ராஜேந்திரன், எம்.லோகநாயகி, எம்.பாரதி, எச்.பாஸ்கரன், வி.ராஜாமணி, எஸ்.அன்பன் ஆகியோர் தலைமையிலும், வட்டக் கழகச் செயலாளர் எஸ்.மன்னா ராஜா கண்ணா, பாக ஒருங்கிணைப்பாளர் எச்.பாஸ்கரன், ராகவன், பிரீத்தி பாய், தினகரன், கண்ணன், எல்.ஆர்.சதீஷ்குமார், பழனி, நாகராஜன், க.ரமேஷ், கி.பூபதி, ம.பற்குணன், ஓ.தண்டபாணி, ஜி.ஜெகநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இதில் மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, தொகுதி பார்வையாளர் ரபி அகமது ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வு செய்து ஆலோசனைகள் வழங்கினார். பகுதிச் செயலாளர் ஏ.கே. கருணாகரன், மகாலட்சுமி கருணாகரன் எம்.சி, தலைமை கழக இளம் பேச்சாளர் செல்வி ரூ.கீர்த்தனா ஆகியோர் கழக அரசின் சாதனைகளை விளக்கி பேசினார்கள். இதில் எம்.சார்லஸ், ஆர்.ராதா கிருஷ்ணன், சி.ஆர்.நரேஷ்குமார், ஏ.சீனிவாசன், எம்.தினேஷ், ஆர்.ஜெரில், கங்காதரன், ரவிச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் குவைத் நாட்டில்

தி.மு.க. அயலக அணி நடத்திய கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

அயலகத் தமிழர் எழுச்சி மாநாடு, நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்கக் கூட்டம்!

கார்த்திகேய சிவசேனாபதி – போஸ் வெங்கட் – பரிதிஇளம்சுருதி – எஸ்.எம்.ஹைதர் அலி பங்கேற்பு!

குவைத், ஜூன் 18 – குவைத் நாட்டில் ஜூன் 13 வெள்ளிக்கிழமை அன்று தி.மு.க. அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா எம்.பி ஆகியோரின் வழிகாட்டுதலின்படி திராவிட முன்னேற்றக் கழக அயலக அணி, குவைத் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, அயலகத் தமிழர் எழுச்சி மாநாடு மற்றும் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விழா சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

தமிழ்த்தாய் வாழ்த்து, குவைத் தேசிய கீதம் மற்றும் இந்திய தேசிய கீதத்துடன் தொடங்கிய இவ்விழாவிற்கு திமுக அயலக அணியின் குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமை ஏற்றார். அமைப்பின் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியை அமைப்பின் துணைச் செயலாளர் முத்துப்பேட்டை ம.சபரிவாசன் மற்றும் அமைப்பின் மகளிர் அணியை சேர்ந்த முத்துப்பேட்டை சந்தியா சபரிவாசன் ஒருங்கிணைத்தனர்.

அமைப்பின் இணைச்செயலாளர்கள் ஆயங்குடி ஜா.சையதுமுஸ்தபா, குடந்தை சி.தியாகராஜன், துணைச் செயலாளர் உளுந்தூர்பேட்டை மு.நஜீர்அகமது, துணைப் பொருளாளர் திருவடத்தனத்தூர் ஏ.எஸ்.முகமது ரபீக், தகவல் தொழில் நுட்ப அணி செயலாளர் மேட்டுவிளை ஜ.ஜானவாஸ், மகளிர் அணி செயலாளர் தஞ்சை சாந்தி பாலசுப்பிரமணியன், பொறியாளர் அணி செயலாளர் திருக்கோவிலூர் அ.பொன்முடி, தொழிலாளர் நல அணி செயலாளர் கூத்தா நல்லூர் ஏ.சாகுல் ஹமீது, ஒட்டுநர் நல அணி செயலாளர் திருச்சி ஏ.ஜே.எம்.இஷாக் ஜக்காரியா, சுற்றுச்சூழல் அணி செயலாளர் தக்கலை ஜோசப் பெர்லின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சிக்கு தாயகத்திலிருந்து சிறப்பு விருந்தி னர்களாக தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நல வாரிய தலைவரும் திமுக கழக சுற்றுச்சூழல் அணி செயலாளருமான கார்த்திகேயன் சிவசேனாபதி, நடிகர், இயக்கு னர், தலைமை கழக பேச்சாளருமான போஸ் வெங்கட் , தி.மு.கழக அயலக அணியின் மாநில துணைச் செயலாளர் பரிதிஇளம்சுருதி மற்றும் குவைத்தின் தொழிலதிபர், எம்.ஏ ஹைதர் குழும நிறுவனர் டாக்டர், எஸ்.எம். ஹைதர் அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் சிறப்பு அழைப்பாளர்களாக திமுக அயலக அணி பஹ்ரைன் துணை அமைப்பாளர் லலித் குமார் மற்றும் டேவிட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவின் முதல் நிகழ்வாக அகமதாபாத்தில் நடைபெற்ற விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் குவைத் வாழ் திராவிட உணர்வாளர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்ப டுகிறது. அதன்படி இந்த ஆண்டு விருதுகள்2025 எனும் தலைப்பில் பகுத்தறிவு பகலவன் "தந்தை பெரியார் விருது" குடந்தை ஆர்.முருகனுகும், படைப்பிலக்கிய பேராசான் "பேரறிஞர் அண்ணா விருது" சேகரை வெ.செல்லதுரைக்கும், முத்தமிழறிஞர் "கலைஞர் விருது" புதுவை அ.அறிவுமணிக்கும், இனமான காவலர் பேராசிரியர் விருது விழுப்புரம் ஐ.ஜஹாங்கீரு க்கும், திராவிட நாயகன் "தளபதி விருது" தானிப்பாடி சே.அஷ்ரப்அலிக்கும், தாய்மொழி தமிழாம் "செம்மொழி விருது" திருவாரூர் ச.குமாருக்கும் வழங்கப் பட்டது.

நிகழ்வில் பள்ளி குழந்தைகளின் உரை வீச்சும், பாரம்பரிய பரதநாட்டியமும் மற்றும் குழு நடனமும் சிறப்பாக அரங்கேறியது. தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் திருபுவனம் ஹ.மொய்தீன் பாட்ஷா, மகளிர் அணி துணைச் செயலாளர் மயிலாடுதுறை ராஜலட்சுமி பாபு, திருவாரூர் கனிமொழி கார்த்திகேயன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சிறப்பு விருந்தினர்கள் பேசும் போது புலம்பெயர் தமிழர்களுக்கு தமிழ்நாடு அரசு செய்திருக்கும் நலத்திட்டங்கள் பற்றியும் இன்னும் வரப்போகின்ற சிறப்பு அறிவிப்புகள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

மேலும் 2026 ஆம் ஆண்டு நடக்கவிருக்கின்ற சட்டமன்ற பொது தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் திராவிட நாயகன் தளபதி மு.க.ஸ்டாலின் அவர் களே பதவியேற்பார் என்றும் அதன் வெற்றி விழா இந்த குவைத் மாநகரில் மிக பிரமாண்டமாக திமுக அயலக அணி குவைத் முன்னெடுக்கும் என்றும் கூறினர். வரும் காலங்களும் தமிழ்நாட்டு மக்களின் வசந்த காலமாக அமையும் என சூலுரைத்தனர். குவைத் வாழ் தமிழ் மக்களிடையே இந்த விழா மாபெரும் வரவேற்பை பெற்றது.

விழாவில் குவைத்தில் கல்ஃப் இந்தியன் பள்ளியில் படித்து ஆண்டு இறுதி தேர்வில் தமிழ் பாடத்தில் முதல் மதிப் பெண் பெற்ற மாணவர்களை பாராட்டும் விதத்தில் பாராட்டு சான்றிதழ் வழங்கி, சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. மேலும் குவைத் நாட்டில் குத்து சண்டை போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டு மாணவன் இஸ்ஹாக் இம்தியாஸ் க்கு கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

குழந்தைகளுக்கான சிற்றுரையில் "என் உயிரினும் மேலான" எனும் தலைப்பில் வலங்கைமான் ரித்திஷ் கலியமூர்த்தி, "திராவிட மாடலில் நாங்கள் போற்றும் நான் காண்டு சாதனை" எனும் தலைப்பில் வலங்கைமான் ஹேமவர்ஷினி கலியமூர்த்தி, "கலைஞர் தாத்தா" எனும் தலைப்பில் முத்துப் பேட்டை சூரிய தேவன் சபரிவாசன் ஆகியோர் உரையாற்றினர்.

இதில் வலங்கைமான் ஹேமவர்ஷினி கலியமூர்த்தி பேசிய 'நான்காண்டு சாதனைகள்' எனும் பேச்சு சமூக வலைதளங்கள் மற்றும் ஊடகங்களில் வைரலாகி வருவது குறிப்பிடத் தக்கது.

நிகழ்வில் அமைப்பின் இளைஞரணி துணைச் செயலாளர்கள் குடந்தை த. மணிகண்டன், லட்சுமாங்குடி பி.ஆர்.பழனி, விழுப்புரம் எஸ். அம்ஜாத், தொண்டரணி துணைச் செயலா ளர்கள் விழுப்புரம் பா.அய்யனார், புதுவயல் ச.செல்வம், கொள்ளிடம் காவேரி செல்வம், உடையார்பாளையம் செந்தில்குமார், பொறியாளர் அணி துணை செயலாளர்கள் மருதூர் ம.பிரேம்குமார், அனைக்காடு ரோம்லஸ் தேவசகாயம், தொழிலாளர் நல அணி துணை செயலாளர்கள் கன்னியாகுமரி ஜோசப் எடிசன், பரங்கிப் பேட்டை முகமது உசேன், ஒட்டுநர் நல அணி துணைச் செயலாளர்கள் பரமக்குடி பி.மோகன், திருவாரூர் திருவரங்கன், லட்சுமாங்குடி சசிகுமார், சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர்கள் உளுந்தூர்பேட்டை சுப்பிரமணியன், கள்ளக்குறிச்சி பெ.சின்னசாமி, மகளிர் அணியை சேர்ந்த வலங்கைமான் அகல்யா கலியமூர்த்தி, திருவண்ணாமலை சுல்தானா, தண்டராம்பட்டு சித்ரா, தானிப்பாடி சுமதி, சென்னை சந்திரலேகா லியாகத் மற்றும் பெருந்திரளான தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளும், நிர்வாகிகளும், தமிழ் உணர்வாளர்களும், கழக உடன்பிறப்புகளும் கலந்து கொண்டனர்.

அமைப்பின் விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் பரங்கிப்பேட்டை ம.நசுருதீன் முகமது நன்றி உரையாற்றினார்.

காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி, காஞ்சிபுரம் மாநகரம், மண்டலம் – 2, வட்டங்கள் 19, 20, 21, 22, 23, 24, 30 ஆகியவற்றுக்கான மக்கள் குறை கேட்பு முகாமில், சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று , சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் தீர்வு காண பரிந்துரைத்தார். இந்நிகழ்வில் மேயர் மகாலட்சுமி யுவராஜ், சன் பிராண்ட் கே. ஆறுமுகம், மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், பகுதி செயலாளர்கள் எஸ். சந்துரு, கே. திலகர், சு. வெங்கடேசன், ஆணையர் சசிகலா உள்ளிட்ட அதிகாரிகள், மாநகர, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், கே. சிவா, ஏ. ராஜரத்தினம், பி. மோகன், மாமன்ற உறுப்பினர்கள் கௌதமி, சுரேஷ், கமலக்கண்ணன் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.